

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், ஆவணத்தான்கோட்டை எஸ்.டி.எம். மஹாலில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் 17.07.2025 அன்று மக்களிடம் விண்ணப்பங்களை பெற்றுக் கொண்டு, விவரங்களை கேட்டறிந்து, மனுக்கள் பதிவு செய்யப்படுவதை ஆய்வு செய்தார். உடன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர் பாஷா, உதவி ஆணையர் (கலால்) திருமால் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



திருச்சி மாவட்டம் துறையூர் மேற்கு ஒன்றியம் திருமானூர் முத்தமிழறிஞர் கலைஞரின் 102 பிறந்தநாள் இளைஞர் அணி தெருமுனைப் பிரச்சாரக் கூட்டம் நடைபெற்றது

### விழுப்புரம் மாவட்டம் - வல்லம் ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

# ரூ.2.22 கோடி மதிப்பில் - தொகுப்பு வீடுகள் புனரமைப்பதற்கான உத்தரவு!

## அமுதா ரவிக்குமார் தலைமையில் – செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

செஞ்சி, ஜூலை 21 - விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம் தொடங்கப்பட்டது.

வல்லம் ஒன்றிய பெருந்தலைவர்அமுதா ரவிக்குமார் தலைமை தாங்கினார்.

உங்களுடன் ஸ்டாலின் முகாமின் கண்காணிப்பு அலுவலரும், ஊரக வளர்ச்சி துறை உதவி செயற்பொறியாளர் அன்புராஜ் முன்னிலை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் ராமதாஸ் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார். தொடர்ந்துமுகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இதையடுத்துஊரக மற்றும் உள்ளாட்சி துறை சார்பில் கிராமப்புறங்களில் உள்ளவிளிம்பு நிலை மக்களுக்கு கட்டப்பட்ட பழைய ஓட்டு வீடுகளை முதலமைச்சரின் வீடுகள் மறு கட்டுமான திட்டத்தின் கீழ் நாட்டார்மங்கலம், சோழங்குணம், அகலூர், கீழ் பாப்பாம்பாடி உள்ளிட்ட 17 ஊராட்சிகளை சேர்ந்த 82 நபர்களுக்கு 1 கோடியே 96 லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வீடுகள் புனரமைப்பதற்கான உத்தரவினையும், கள்ளப்புலியூர் ஊராட்சியைச் சேர்ந்த 5 பழங்குடியின மக்களுக்கு25 லட்சத்து 53 ஆயிரத்து 900ரூபாய் மதிப்பீட்டில் ஜன்மன் திட்டத்தில் வீடு கட்டுவதற்கான உத்தரவினை அவர் வழங்கினார்.

அப்போது நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் பேசுகையில்:

தாய் தந்தைக்கு மகன் செய்ய வேண்டிய கடமையாக இன்றைக்கு வயதான தாய் தந்தைகளுக்கு முதலமைச்சர் ஒரு மகனாக முதியோர் உதவித் தொகையை உயர்த்தி மாதம் மாதம் வழங்கி வருவதாகவும் மேலும் பல்வேறு திட்டங்களை முதலமைச்சர் செயல் படுத்தி வருவதாக முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பெருமிதம் தெரிவித்தார்

முன்னதாக திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து சென்னைக்கு நாட்டார்மங்கலம் வழியாக சென்ற பொதுப்பணித் துறை அமைச்சர் ஏ.வ. வேலு, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு ஆகியோருக்கு வல்லம் வட்டார வளர்ச்சி அலுவலகம் எதிரில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் வரவேற்பளித்தனர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை, துரை, இளம்வழுதி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ராமதாஸ், இளங்கோவன், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், தி.மு.க. நிர்வாகிகள் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர். வட்டார வளர்ச்சி அலுவலர்இளங்கோவன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

### கண்மணி நெடுஞ்செழியன் தலைமை! மேல்மலையனூர் ஒன்றியம்

# வளத்தியில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

செஞ்சி ஜூலை 21. விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் வளத்தி ஊராட்சியில் 'உங்களுடன் ஸ்டாலின்' 'திட்டம் முகாம் தொடங்கப்பட்டது.

மேல்மலையனூர் ஒன்றிய பெருந்தலைவர் கண்மணி நெடுஞ்செழியன் தலைமையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார். தொடர்ந்து முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார். தொடர்ந்து வேளாண்மை திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு வேளாண்மை கருவிகளை அவர் வழங்கினார்.

முன்னதாக மருத்துவ மற்றும் நல்வாழ்வுத்துறை மூலம் வளத்திஆரம்ப சுகாதார மருத்துவமனை சார்பில்உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ தலைமையில் உறுதிமொழி ஏற்றனர்.

தொடர்ந்து விழிப்புணர்வு பிரச்சார வாகனத்தை கொடியசைத்து தொடங்கி வைத்த முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய பெட்டகத்தினையும், ரத்த அழுத்தம், நீரழிவு நோய் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரைகள் அடங்கிய பெட்டகத்தினைஅவர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் நெடுஞ்செழியன், நாராயணமூர்த்தி, சாந்தி சுப்பிரமணியன், மாவட்ட கவுன்சிலர் செல்வி ராம சரவணன், முகாம் கண்காணிப்பு அலுவலர் யாசின், வட்டாட்சியர் தனலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெய்சங்கர் சீதாலட்சுமி, அரசு மருத்துவர்கள் வெங்கடேசன், அண்ணாதுரை, ஜெயஸ்ரீ, அர்ச்சனா,செவிலியர்கள் சுகாதார ஆய்வாளர்கள்உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில்

# கலைஞர் பிறந்த நாள் - நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டம்!

## டாக்டர் எ.வ.வே.கம்பன், சி.என்.அண்ணாதுரை, கந்திலி கரிகாலன் பங்கேற்பு!

திருவண்ணாமலை, ஜூலை 21- திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் கலைஞர் பிறந்த நாள் விழா, கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது. தெருமுனைக் கூட்டங்களில் கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ. வே. கம்பன், நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, கந்திலி கரிகாலன், இளம் பேச்சாளர் கருணாநிதி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

18.07.2025 வெள்ளிக்கிழமை மாலை 6.30மணிக்கு, திருவண்ணாமலை தெற்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதியில் கலைஞர் பிறந்த நாள் விழா, கழக அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கி தெருமுனைக் கூட்டம் நடைபெற்றது.

தெருமுனைக் கூட்டத்திற்கு மாநகர செயலாளர் ப.கார்த்தி வேல்மாறன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர்.சந்திரன், த. ரமணன், பெ.கோவிந்தன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி துணை அமைப்பாளர் சு.ராஜாங்கம் எஸ். கண்ணதாசன், கோ.ராஜசேகர், எம்.ரமேஷ், எஸ். சதிஷ்குமார், டி.திலிப்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சி.என்.அண்ணாதுரை அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

திருவண்ணாமலை மாநகரம், அறிவொளிப் பூங்கா, தி.மலை ஒன்றியம், அரடாப்பட்டு ஊராட்சி ஆகிய இடங்களில், கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ. வே.கம்பன், தலைமைக் கழக பேச்சாளர் கந்திலி கரிகாலன், இளம் பேச்சாளர் கருணாநிதி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

திருவண்ணாமலை ஒன்றியம் மேல்செட்டிப்பட்டு, தண்டராம்பட்டு ஒன்றியம் கீழ்சிறுப்பாக்கம் ஆகிய இடங்களில் நடைபெற்ற தெருமுனைக் கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர் சேலம் சுஜாதா, செல்வி ராதிகா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்.

மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொன்.முத்து, மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணைச் செயலாளர் ப்ரியா ப. விஜயரங்கன், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன்,

மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா. ஷெரீப் மற்றும்

நகர நிர்வாகிகள் சி.சண்முகம், மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாசலம், ஜீவரேகா விஜயராஜ், மாவட்ட பிரதிநிதிகள் இல.குண சேகரன், அ.கண்ணன், கோல்டு.பிரபு, ஹக்கிம் சேட், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் தே.மஞ்சுநாதன், கு. வினோத்குமார், பா.அன்பழகன், இரா.சதீஷ், ச. சூரியா, மா.ஸ்டாலின், ரவிச்சந்திரன், நகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சச்சின் சபரி, கீழ்நாத்தூர் ராஜேந்திரன், மு.சூரியபிரகாஷ், ப.கிஷோர், ஆ.சீனுவாசன், க.சந்தோஷ், எம்.எஸ். டி.மணி, ஆ.யாதீஸ்வரன், சா.ரகுநாத், ஒன்றிய துணை அமைப்பாளர்கள் இரா.விக்ரம், ஆர்.கார்த்திக், ஜெயக்குமார், து.சிவனேசன், ஆர்.பாலசுந்தர் த.பவுன்குமார், ம.ராமச்சந்திரன், கோ.லட்சுமி நாராயணன், மாவட்ட துணை அமைப்பாளர்கள் கஸ்தூரி, ராஜேஸ்வரிகலியமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் ஆண்டாள்செல்வராஜ், மெட்ராஸ் கே. சுப்பிர மணி, பி.ஆர்.நாகராஜ், க.பிரகாஷ் மற்றும் வட்ட செயலாளர்கள் செ. எழில்மாறன், அ.கஜபதி, வி.எஸ்.ரவீந்திரன், ம. வினோத் குமார், எஸ். கே.டி.வீரா, தே.சங்கர், கு.காளிதாஸ், ஆர்.சசி(எ) கௌதமன், சென்னை. சுரேஷ் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நிறைவாக மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் மண்டி ஆ.பிரகாஷ், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள் எம். ஜி.எஸ்.இளவரசன், மூ. கார்த்தி, செ.விஜய மூர்த்தி ஆகியோர் நன்றி கூறினர்.

முன்னதாக செல்லங்குப்பம் சுப்பிரமணியின் நாட்டுப்புற இசை நிகழ்ச்சி நடைபெற்றது.

# கொளத்தூர் பகுதியில் அறுசுவை உணவு!

## அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் வழங்கினார்!

சென்னை, ஜூலை 21 – முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின்பிறந்தநாளைமுன்னிட்டு மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவாக சென்னை கிழக்கு மாவட்டம் ஆண்டுதோறும் கொண்டாடி வருகிறது. இந்தஆண்டுகழகத்தலைவரின் 72வது பிறந்த நாளையொட்டி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் "அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் உன்னதமான திட்டமானது 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி19ஆம்தேதிவரை365நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு மேல், வெவ்வேறு இடங்களில்காலை உணவுவழங்கதிட்டமிடப்பட்டுள்ளது.

இச்சிறப்புமிகு திட்டத்தை செயல் படுத்தும் வகையில் 20.2.2025 அன்று கொளத்தூரில் மதிப்புமிகு அண்ணியார் திருமதி. துர்கா ஸ்டாலின் அவர்களுடைய திருக்கரங்களால் தொடங்கி வைத்து சிறப்பித்தார்கள். அந்த வகையில் 24ஆம்நாள் உணவுமற்றும்உணவுப் பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி அவர்களும், 30வது நாள் உயர்கல்வித்துறை அமைச்சர் டாக்டர்கோவி. செழியன், 50வதுநாள் கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி 5வது நாள் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிர மணியம், 100வது நாள் பொதுப்பணித் துறைஅமைச்சர்எ.வ.வேலு,125வது நாள் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் கலந்து கொண்டு காலை உணவு வழங்கினர் .

இந்நிகழ்ச்சியானது வெற்றிகரமாக தொடர்ந்து 150 வது நாளான நேற்று (19–07–2025), கொளத்தூர் மேற்கு பகுதி, 64 அ வார்டு, கொளத்தூர், அவார்டில்உள்ளமேயர்சிட்டிபாபு பூங்கா அருகிலும் மற்றும் 64 வது வார்டு, பெருமாள் கோவில் தெருவில் உள்ள மக்காரம் தோட்டம் அருகிலும் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் கலந்துகொண்டு பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கி சிறப்பித்தார்.





கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டிணம் ஊராட்சி ஒன்றியம், கூரம்பட்டி ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், அமைக்கப்பட்ட மருத்துவ முகாமை பார்வையிட்டு நாகோஜனஅள்ளி பேரூராட்சிக்குட்பட்ட, வேலம்பட்டியில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில், என்.தட்டக்கல் கிராமத்தைச் சேர்ந்த 17 இருளர் இன மக்களுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே. மதியழகன் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் ஆகியோர் வழங்கினர். உடன் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், ஒன்றிய செயலாளர் மகேந்திரன் , வட்டார வளர்ச்சி அலுவலர் சரவணன், வட்டார மருத்துவ அலுவலர் தாமரைசெல்வி நாஹோஜன அள்ளி பேரூராட்சி தலைவர் தம்பிதுரை, செயல் அலுவலர் அருண்குமார் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# இந்திய கப்பல் மாலுமிகள் முன்னேற்ற சங்க நிர்வாகிகள்!

## தொ.மு.ச. பேரவை அறிவிப்பு!

தொ.மு.ச. பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் இந்திய கப்பல் மாலுமிகள் முன்னேற்ற சங்கம் (பதிவு எண். 328/ஊனுசு, பேரவை இணைப்பு எண். 1133) நிர்வாகிகளாக கீழ்க்கண்டவர்கள் அறிவிக்கப்படு கிறார்கள்.

சங்க நிர்வாகிகள்

| | |
|---|---|
| தலைவர் | ஆ. அருணகிரிநாதன் |
| துணைத் தலைவர்கள் | 1) கிறிஸ்டோபர் கிஷோர் குமார் |
| | 2) A.S. விவேகானந்த் |
| | 3) பீட்டர் தாசன் |
| | 4) சூ. சந்திரசேகரன் |
| பொதுச்செயலாளர் | J. வினோத்குமார் |
| துணைச்செயலாளர்கள் | 1) ஆரோக்ய அந்தோணி மைக்கில் தேவசகாயம் |
| | 2) சு. பாலமுருகன் |
| | 3) அந்தோணி பிரசாத் பெனடிக் |
| | 4) நாகராஜன் இசக்கியப்பன் |
| பொருளாளர் | ஜோசப் மேத்யூ டெனி |
| பொதுக்குழு உறுப்பினர்கள் | 1) அக்சார் ஹைட்ரோஸ் |
| | 2) சபரீஸ் ஐயப்பன் |
| | 3) அரவிந்தன் மகேந்திர வர்மன் |
| | 4) கோபி பாலசுப்பிரமணியன் |

**இடம் : கலைஞரகம்**
நாள் :19.07.2025

**(மு.சண்முகம், எம்.பி.)**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை

# கலைஞரின் புதல்வர் மு.க.முத்து மறைவு!

## மருத்துவர் அன்புமணி இராமதாஸ் இரங்கல்!

சென்னை, ஜூலை. 21- கலைஞரின் புதல்வர் மு.க.முத்து அவர்களின் மறைவுக்கு மருத்துவர் அன்புமணி இராமதாஸ் விடுத்துள்ள இரங்கல் செய்தி வருமாறு:-

முத்தமிழ் அறிஞர் கலைஞரின் மூத்த புதல்வரும், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் மூத்த சகோதரரும் திரைப்பட நடிகருமான மு.க. முத்து அவர்கள் சென்னையில் இன்று காலமானார் என்ற செய்தியறிந்து வருத்தம் அடைந்தேன்.

அவரை இழந்து வாடும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் உள்ளிட்ட குடும்பத்தினர், நண்பர்கள், திமுகவினர் உள்ளிட்ட அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில், மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் இணைந்து நடத்திய மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா ஆகியோர் துவக்கி வைத்து, 602 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.